செய்தி வெளியீடு எண். 622 நாள்.21.11.2019

**கும்மிடிப்பூண்டி மற்றும் பொன்னேரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் முதலமைச்சரின் சிறப்பு மக்கள் குறை தீர்க்கும் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட மனுக்களுக்கு, பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், பொன்னேரி மற்றும் கும்மிடிப்பூண்டி தொகுதிகளைச் சேர்ந்த 7103 பயனாளிகளுக்கு ரூ.6.90 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை, மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் திரு.பா.பெஞ்ஜமின் அவர்கள், மாண்புமிகு தமிழ்ஆட்சி மொழி, கலைபண்பாடு மற்றும் தொல்லியல்துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மகேஸ்வரி ரவிக்குமார்,இ.ஆ.ப., ஆகியோர் வழங்கினர்.**

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி மற்றும் பொன்னேரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் முதலமைச்சரின் சிறப்பு மக்கள் குறை தீர்க்கும் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட மனுக்களுக்கு, பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், பொன்னேரி மற்றும் கும்மிடிப்பூண்டி தொகுதிகளைச் சேர்ந்த 7103 பயனாளிகளுக்கு ரூ.6.90 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை, மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் திரு.பா.பெஞ்ஜமின் அவர்கள், மாண்புமிகு தமிழ்ஆட்சி மொழி, கலைபண்பாடு மற்றும் தொல்லியல்துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மகேஸ்வரி ரவிக்குமார்,இ.ஆ.ப., ஆகியோர் இன்று (21.11.2019) வழங்கினர்.

இதனைத் தொடர்ந்து மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது :

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த சட்டமன்ற கூட்டத் தொடரில் விதி எண். 110 கீழ், முதலமைச்சரின் சிறப்பு மக்கள் குறை தீர்க்கும் திட்டத்தினை அறிவித்தார்கள். அதனை செயல்படுத்தும் வகையில், தமிழகத்தின் அனைத்து மாவட்ட ஆட்சியாளர்களுக்கும் முதலமைச்சரின் சிறப்பு மக்கள் குறை தீர்க்கும் திட்டம் முகாமினை நடத்தி கோரிக்கை மனுக்களை பெறுமாறு உத்தரவு பிறப்பித்திருந்தார்கள். அதன்படி, மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் கடந்த 26.08.2019 முதல் 30.08.2019 வரையிலான 5 நாட்கள் முகாம்கள் நடைபெற்று, கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது. அந்த மனுக்களை சம்மந்தப்பட்ட ஒவ்வொரு துறைக்கும் அனுப்பி வைக்கப்பட்டு, முறையாக பரிசீலித்து, இன்று கும்மிடிப்பூண்டி மற்றும் பொன்னேரி சட்டமன்ற தொகுதியில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் இன்று பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பாக, மாண்புமிகு முதலமைச்சரின் சிறப்பு மக்கள் குறை தீர்க்கும் திட்டம் மூலமாக, திருவள்ளூர் மாவட்டத்திற்குட்பட்ட கும்மிடிப்பூண்டி சட்டமன்ற தொகுதியில் 2773 பயனாளிகளுக்கும், பொன்னேரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 4330 பயனாளிகளுக்கும் என மொத்தம் 7103 பயனாளிகளுக்கு ரூ. 6.90 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. எனவே, மக்களால் வைக்கப்படும் கோரிக்கைகளை உடனுக்குடன் நிறைவேற்றும் வகையில் தமிழக அரசு செயல்பட்டு வருகிறது.

இந்நிகழ்ச்சிகளில் முதலமைச்சர் பொது நிவாரண நிதியின் கீழ் 2 பயனாளிகளுக்கு ரூ. 1,50,000-ம், சமூக பாதுகாப்புத் திட்டம் வாயிலாக 4336 பயனாளிகளுக்கு மாதம் ரூ.1000 உதவித்தொகை வழங்குவதற்கான ஆணைகளையும், முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 19 பயனாளிகளுக்கு ரூ.21,24,000 மதிப்பில் திருமண மற்றும் இயற்கை மரணம் ஈமச்சடங்கிற்கான உதவித்தொகையும், 2 பயனாளிகளுக்கு ரூ. 9000 மதிப்பில் கல்வி உதவித்தொகையையும், 1157 பயனாளிகளுக்கு ரூ.5,02,96,163 மதிப்பிலான இலவச வீட்டுமனை பட்டாக்களும், 33 பயனாளிகளுக்கு ரூ. 2,80,500 மதிப்பிலான மோட்டார் பொருத்தப்பட்ட இலவச தையல் இயந்திரங்களும், 45 பயனாளிகளுக்கு ரூ. 11,37,500 மதிப்பிலான அம்மா இருசக்கர வாகனங்களும், 564 பயனாளிகளுக்கு முழுபுலம் மற்றும் உட்பிரிவு பட்டாக்களுக்கான ஆணைகளையும், 190 பயனாளிகளுக்கு மின்னணு குடும்ப அட்டைகளும், 336 மகளிர் சுய உதவிக்குழு பயனாளிகளுக்கு ரூ. 84.00 இலட்சம் சமுதாய முதலீட்டு நிதியும், 144 நகர்புற மகளிர் சுய உதவிக் குழு பயனாளிகளுக்கு ரூ. 1.20 இலட்சம் மதிப்பீட்டில் சுழல் நிதியும், 203 பயனாளிகளுக்கு பழங்குடியினர் இனச்சான்று மற்றும் இதர சான்றிதழ்களும் என மொத்தம் 7103 பயனாளிகளுக்கு ரூ. 6.90 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.பலராமன், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.எஸ்.விஜயகுமார், திட்ட இயக்குநர் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திரு.வை.ஜெயகுமார், வட்டாட்சியர்கள் திரு.சுரேஷ் (கும்மிடிப்பூண்டி), செல்வி.இளவரசி (ஊத்துக்கோட்டை) திரு.மணிகண்டன் (பொன்னேரி), பல்வேறு துறை அரசு அலுவலர்கள், பயனாளிகள் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**